**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 409 of 2025

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ராமராஜ்

Father's Name : த/பெ. காளியப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1.நான் கிணத்துக்கடவு அருகே உள்ள பகவதிபாளையம் கிராமத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த மணிவேல் எனது மகன் ஆவார். தேதி ஞாபகம் இல்லை. எட்டாவது மாதம் கடந்த 2019 ஆம் ஆண்டு எனது மகன் இருசக்கர வாகனத்தில் நண்பருடைய பிறந்தநாளுக்கு கேக் வாங்க வேண்டி சுல்தான்பேட்டையில் இருந்து பெரிய களந்தைக்கு இரவு சுமார் 8.00 மணி அளவில் சென்று மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக கேக் வாங்கிக் கொண்டு கே.ஆர்.கே மண்டபம் அருகே வந்து கொண்டிருந்த பொழுது பால் ஏற்றிக் கொண்டு வந்த வண்டி எனது மகனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டதாக எனது பக்கத்து வீட்டைச் சார்ந்த ஒரு நபர் எனக்கு தகவல் சொன்னார். நாம் சம்பவம் சென்ற பொழுது இரவு சுமார் 9.30 மணி இருக்கும். நான் நேரடியாக எனது மகன் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்ற அறிந்து நான் மருத்துவமனைக்கு சென்றேன் அன்றைய தினம் எனது மகன் தீவிர சிகிச்சை பிரிவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

2. அப்பொழுது எனது மகனுடன் எனது மகனின் நண்பர் முருகேசன் என்பவரும் சென்று உள்ளார் முருகேசன் அவர்களுக்கும் சிறிய அளவில் அடிபட்டிருந்தது. எனது மகன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் பின்னர் இது சம்பந்தமாக நான் மருத்துவமனையில் இருந்த பொழுது போலீசாரிடம் புகார் அளித்தேன். என்னிடம் கட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான் புகார் **அசா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.சம்பவத்தின் பொழுது எனது மகனுக்கு வயது 24 ஆகும். இருசக்கர வாகனம் ஓட்ட எனது மகன் ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தார். சம்பவத்தின் போது எனது மகன் ஹெல்மெட் அணிந்திருந்தார். விபத்து சம்பந்தமாக தகவல் சொன்னவர் பெயர் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. எனது மகனுக்கு விபத்தானது சாலையில் நடுவில் உள்ள வெள்ளை கோட்டுக்கு அருகில் தான் நடைபெற்றது என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது நான் நேரடியாக மருத்துவமனை தான் சென்றேன். சம்பவ விபத்தானது எனது மகனின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.11 20:06:57 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**